



# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்


தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235



டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி:16.06.2024

**விக்கிரவாண்டி இடைத்தேர்தல் தேசிய ஜனநாயகக் கூட்டணியின்**
**வெற்றிக்கணக்கை தொடங்கிடும் தேர்தலாக அமையட்டும் !**
**தடைகளையும் எதிர்ப்புகளையும் துணிவுடன் எதிர்கொண்டு**
**தீவிர தேர்தல் களப்பணியாற்றிட**
**கழக உடன்பிறப்புகளுக்கு அன்பு வேண்டுகோள்..!**

**தமிழகத்தில் வரும் ஜூலை 10 ஆம் தேதி நடைபெற உள்ள விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடுவதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டு அக்கட்சியின் சார்பில் திரு.C.அன்புமணி அவர்கள் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.**

கச்சத்தீவை தாரைவார்த்ததில் தொடங்கி தமிழ்நாட்டின் ஜீவாதாரமான காவிரி, முல்லைப்பெரியாறு அணை விவகாரம், நாள்தோறும் அரங்கேறும் சட்டம், ஒழுங்கு சீர்கேடுகள், இளையசமுதாயத்தை குறிவைக்கும் போதைப் பொருட்களின் கலாச்சாரம், என அனைத்து வழிகளிலும் **தமிழக மக்களுக்கு துன்பம் இழைத்துக் கொண்டிருக்கும் தி.மு.க. விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் மீண்டும் வெற்றிபெறத் துடிப்பது தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காகத் தானே தவிர, மாநிலத்திற்கோ மக்களுக்கோ நல்லது செய்வதற்காக அல்ல என்பதை மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உள்ளது.**

***ஆட்சி அதிகாரத்தை சுயநலத்திற்காக மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஆளும் தி.மு.க.வை எதிர்கொள்ளமுடியாமல் தேர்தல் களத்திலிருந்து வெளியேறியிருப்பதன் மூலம் பழனிசாமியை தமிழக மக்கள் ஏற்கனவே புறக்கணித்துவிட்டார்கள் என்பது தெள்ளத்தெளிவாகிறது.***

***அராஜகத்திற்கும் அத்துமீறல்களுக்கும் அடையாளமாகிப் போன தி.மு.க.விற்கும், மக்களை சந்திக்கமுடியாமல் தேர்தலை புறக்கணித்து புறமுதுகிட்டு ஓடும் பழனிசாமிக்கும் தகுந்த பாடம் புகட்டும் வகையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் திரு.C.அன்புமணி அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.***

***வேரின்றி மரமில்லை என்பதைப் போல தொண்டர்களின்றி நானில்லை என்று சொல்லும் அளவிற்கு தன்னலம் கருதாத தொண்டர்களை பெற்றிருப்பது நான் செய்த பாக்கியமாகவே கருதுகிறேன்.*** *நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும், சென்னை முதல் கன்னியாகுமரி வரை* ***ஜாதி மதங்களை கடந்து ஆளுங்கட்சிக்கும், ஆண்ட கட்சிக்கும் சவால் விடும் அளவிற்கு கழகம் தொடர்ந்து பயணிக்கிறது என்றால் அதற்கு என் உயிரினும் மேலான தொண்டர்கள் மட்டுமே காரணம்.***

*ஆகவே, ஆளும் தி.மு.க.வை தீரத்துடன் எதிர்கொண்டு தீவிர தேர்தல் களப்பணியின் மூலம்* ***தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளரின் வெற்றியை உறுதி செய்திடும் வகையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கீழ்கண்டவாறு தேர்தல் பணிக்குழு அமைக்கப்படுகிறது.***

<u>**தேர்தல் பணிக்குழு**</u>

| | |
|---|---|
| 1. | **திரு.C.கோபால் Ex.MP** *அவர்கள்*<br>*கழக தலைவர்* |
| 2. | **திரு.M.கோமுகி மணியன் Ex.MLA** *அவர்கள்*<br>*கழக துணை தலைவர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 3. | **திரு.C.சண்முகவேலு Ex.Minister** *அவர்கள்*<br>*கழக துணை பொதுச்செயலாளர், திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளர்* |

| | |
|---|---|
| 4. | **திரு.M.ரெங்கசாமி Ex.MLA** *அவர்கள்*<br>*கழக துணை பொதுச்செயலாளர், தஞ்சாவூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 5. | **திரு.G.செந்தமிழன் Ex.Minister** *அவர்கள்*<br>*கழக துணை பொதுச்செயலாளர், தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்,*<br>*கழக செய்தி தொடர்பாளர்* |
| 6. | **திரு.S.V.S.P.மாணிக்கராஜா** *அவர்கள்*<br>*கழக துணை பொதுச்செயலாளர், கயத்தாறு ஒன்றியக் குழு பெருந்தலைவர்* |
| 7. | **வீரபாண்டி திரு.S.K. செல்வம் Ex.MLA** *அவர்கள்*<br>*கழக பொருளாளர், சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர்* |
| 8. | **தொட்டியம்.திரு.M.ராஜசேகரன் Ex.MLA** *அவர்கள்*<br>*கழக தலைமை நிலைய செயலாளர், திருச்சி புறநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்,*<br>*கழக செய்தி தொடர்பாளர்* |
| 9. | **திரு.D.K.ராஜேந்திரன்** *அவர்கள்*<br>*கழக தலைமை நிலைய செயலாளர், தருமபுரி மாவட்ட கழக செயலாளர்* |
| 10. | **திரு.N.G. பார்த்திபன் Ex.MLA** *அவர்கள்*<br>*கழக தேர்தல் பிரிவு செயலாளர், ராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர்* |
| 11. | **திரு.V.P.குமரேசன்** *அவர்கள்*<br>*கழக தேர்தல் பிரிவு செயலாளர்* |
| 12. | **செல்வி.C.R.சரஸ்வதி** *அவர்கள்*<br>*முன்னாள் சமூக நல வாரிய தலைவர், கழக கொள்கை பரப்பு செயலாளர்* |
| 13. | **திரு.ம.கரிகாலன்** *அவர்கள்*<br>*கழக அமைப்பு செயலாளர், கழக பொறியாளர் அணி செயலாளர்,*<br>*செங்கல்பட்டு வடக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 14. | **திரு.*K.P.*நல்லசாமி** *அவர்கள்*<br>*திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 15. | **திரு.K.டேவிட் அண்ணாதுரை** *அவர்கள்*<br>*கழக இதயதெய்வம் அம்மா பேரவைசெயலாளர், கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர்,*<br>*மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், கழக செய்தி தொடர்பாளர்* |
| 16. | **வானூர் திரு.*N.*கணபதி, Ex.MLA** *அவர்கள்*<br>*கழக அமைப்பு செயலாளர்* |
| 17. | **திரு.*U.C.*ஆறுமுகம், Ex.MLA** *அவர்கள்*<br>*கழக அமைப்பு செயலாளர்* |
| 18. | **திரு.M.கோதண்டபாணி Ex.MLA** *அவர்கள்*<br>*செங்கல்பட்டு தெற்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 19. | **திரு.*S.K.(எ) S.*கார்த்திகேயன்** *அவர்கள்*<br>*கழக அமைப்பு செயலாளர்* |
| 20. | **திரு.*S.D.*சேகர்** *அவர்கள்*<br>*புதுச்சேரி மேற்கு மாநில செயலாளர்* |

| | |
|---|---|
| 21. | **திரு.*K.* முருகன்** *அவர்கள்*<br>*புதுச்சேரி கிழக்கு மாநில செயலாளர்* |
| 22. | **திரு.*P.* கோவிந்தராஜ்** *அவர்கள்*<br>*விழுப்புரம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 23. | **திரு.*M.D.* முத்து** *அவர்கள்*<br>*விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 24. | **திரு.இ.குமரன்** *அவர்கள்*<br>*விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 25. | **திரு.K.G.P.ராஜாமணி** *அவர்கள்*<br>*கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 26. | **திரு.மா.கி.வரதராஜன்** *அவர்கள்*<br>*திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 27. | **திரு.செங்கம் *A.*பரந்தாமன்** *அவர்கள்*<br>*திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 28. | **திரு.அக்ரி திரு.*P.* முருகேசன்** *அவர்கள்*<br>*கடலூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 29. | **திரு.ஆடிட்டர் திரு.*N.* சுந்தரமூர்த்தி** *அவர்கள்*<br>*கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 30. | **திரு.*R.* மோகன்** *அவர்கள்*<br>*கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர்* |
| 31. | **திரு.*P.*சக்திவேல்** *அவர்கள்*<br>*கடலூர் மத்தியம் மாவட்ட கழக செயலாளர்* |
| 32. | **டாக்டர்.*A.*சதீஷ்குமார்** *அவர்கள்*<br>*கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.இளைஞர் அணிசெயலாளர்,*<br>*செங்கல்பட்டு மத்தியம் மாவட்ட கழக செயலாளர்* |
| 33. | **திரு.*P.* முத்துக்குமார்** *அவர்கள்*<br>*கழக தகவல் தொழில்நுட்ப ஆண்கள் பிரிவுசெயலாளர்* |

*தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து பணியாற்ற கழகத்தின் அனைத்து நிலையிலான நிர்வாகிகளையும், தொண்டர்களையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.*

***தடைகளையும், எதிர்ப்புகளையும் துணிவுடன் எதிர்கொண்டு தீவிர தேர்தல் களப்பணியாற்றுவோம். அரசியல் நெருக்கடிகளையும் சூழ்ச்சிகளையும் முறியடித்து தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி முத்திரையை பதித்திடுவோம்.***

**டிடிவி தினகரன்**